**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், குடவாசல்**

2025-ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11-ம் நாள்வியாழக்கிழமை

**O.S. No.31/2025**

வாதி தரப்பு சாட்சியாகிய PW.3 ன் வாக்குமூலம் (1969-ம் ஆண்டின் 44-வது சட்ட ஏற்பாட்டின் படி) திரு. M. முகம்மது அர்ஷத் பரீத், B.B.A., LLB., (HONS)., மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், குடவாசல் அவர்களால் ஆணையிட்டு உறுதி கூறப்பட்டது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | வீரசிகாமணி | தாலுக்கா | : | குடவாசல் |
| த/க/பெ. | : | லோகநாதன் | கிராமம் | : | சீதக்கமங்கலம் |
| | | | தொழில் | : | கிராம நிர்வாக அலுவலர் |
| | | | வயது | : | 49 |

**முதல் விசாரணை**

நான் சீதக்கமங்கலத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். குடவாசல் நீதிமன்றத்திலிருந்து வட்டாட்சியருக்கு அழைப்பாணை பெறப்பட்டு குடவாசல் வட்டாட்சியர் உத்தரவின் அடிப்படையில் குடவாசல் வட்டாட்சியர் சார்பாக இன்று நீதிமன்றத்தில் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன். அழைப்பாணையில் சொல்லியுள்ள தாவா சொத்து சம்மந்தமான ஆவணங்களை கொண்டு வந்துள்ளேன். நான் நத்தம் சிட்டா, நத்தம் அடங்கல் பதிவேடு, புலப்பட சுவடி ஆகியவற்றை கொண்டு வந்துள்ளேன். **நான் கொண்டு வந்துள்ள புல எண்.44/19 க்கான நான்கெல்லை சான்றானது சா.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் கொண்டு வந்துள்ள புல எண்.44/19 க்கான நத்தம் மனைவாரிய தோராய பட்டா சா.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் கொண்டு வந்துள்ள புல எண்.44/19 க்கான அ-பதிவேடு சா.சா.ஆ.3 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் கொண்டு வந்துள்ள புல எண்.44/19 க்கான நத்தம் நில வரி தூய அடங்கல் பதிவேடு சா.சா.ஆ.4 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் கொண்டு வந்துள்ள புல எண்.44/19 க்கான நத்தம் தூயசிட்டா சா.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது. நான் கொண்டு வந்துள்ள புல எண்.44/19 க்கான புலப்பட சுவடி சா.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.**

**குறுக்கு விசாரணை**

பட்டா எண்.19 யார் பெயரில் உள்ளது என்றால் சின்னையன் மகன் கலியமூர்த்தி(வாதி) பெயரில் உள்ளது என்றால் சரிதான். வாதி கலியமூர்த்தி சீதக்கமங்கலம் உட்கடையை சேர்ந்தவர். தாவா சொத்தினைப் பொறுத்து R.I அல்லது VAO வழங்கிய அறிக்கை ஏதும் உள்ளதா என்றால் கிராம நிர்வாக அலுவலர் அறிக்கை மட்டும் உள்ளது.

நான் சா.சா.ஆ.1 ஆன சான்றில் இன்று தான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். வாதி பட்டா எண்.19 வழங்கிய இடத்திலிருந்து 100 மீட்டர் தொலைவில் வயலை தூர்த்து விட்டு குடியிருந்து வருகிறார் என்றால் சரிதான். அந்த வீட்டிற்கு மின்சாரம் வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். பட்டா எண்.19 வாதிக்கு வழங்க்பபட்டு காலிமனையாக இருந்து வருகிறது என்றால் சரிதான். 1ம் பிரதிவாதியின் பெயர் கலியமூர்த்தி அவரது தகப்பனார் பெயர் கோடியான் என்றால் சரிதான். 1ம் பிரதிவாதி வழக்கு சொத்தின் அருகில் மாடி வீடு கட்டி குடியிருந்து வருகிறார். 1ம் பிரதிவாதிக்கு தாவா ஊரில் பட்டா வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த பட்டா எண்.44/18 ஆகும். மேற்படி பட்டா எண்.44/18 ல் தான் மாடி வீடு கட்டி குடியிருந்து வருகிறார். பொதுவாக வீட்டில் பாம்பு புகுந்தால் குடியிருக்க மாட்டார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. வாதி வழக்கு சொத்தில் முன்பு குடியிருந்து வந்தார் என்றால் சரிதான். வாதிக்கு தாவா சொத்து உள்ள இடத்தில் தான் ரேஷன் அட்டை வழங்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். எத்தனை வருடங்களாக தாவா சொத்து காலியாக உள்ளது என்றால் நான் சீதக்கமங்கலத்தில் பணிக்கு வந்த நாளிலிருந்து காலியாகத்தான் உள்ளது. சா.சா.ஆ.1 ஆவணம் வட்டாட்சியர் சொல்லியதால் சான்றிதழ் வழங்கினேன். எழுத்து மூலமாக வட்டாட்சியர் சான்றிதழ் வழங்க ஆணையிட்டாரா என்றால் இல்லை. சா.சா.ஆ.3 ஆவணத்தில் வட்டாட்சியரின் முத்திரை உள்ளதா என்றால் இல்லை என்னுடைய முத்திரை மட்டும் உள்ளது. சட்டத்திற்கு புறம்பாக வாதிக்கு உதவ வேண்டும் என்று சா.சா.ஆ.3 ஆவணத்தை கொண்டுவந்துள்ளேன் என்றால் சரியல்ல. சா.சா.ஆ.4 மற்றும் சா.சா.ஆ.5 ஆவணத்தில் என்னுடைய கையொப்பமோ வட்டாட்சியர் கையொப்பம இல்லை என்றால் சரிதான். சா.சா.ஆ.6 ஆவணத்தில் நில அளவையர் பிரிவில் உள்ள ஆவணம் என்றால் சரிதான். சா.சா.ஆ.6 ஆவணத்தில் தலைமை நில அளவையர் கையொப்பமோ அல்லது வட்டாட்சியர் கையொப்பமோ இல்லை என்றால் சரிதான். நத்தம் நிலவரித்திட்டம் என்பது வீடு கட்ட இடம் இல்லாதவர்களுக்கு வீடு வழங்குவதற்கான திட்டம் என்றால் சரிதான். வாதி வேறிடத்தில் குடியிருந்து வருவதால் முன்பு வழங்கிய இந்த பட்டாவை ரத்து செய்ய வேண்டும் என்றாலும் அவருக்கு ஆதரவாக நான் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**மறுவிசாரணை** - நான் 10.07.2025 லிருந்து உட்கடை கிராமத்தில் கிராம நிர்வாக அலுவலராக பணியாற்றி வருகிறேன். கிராமத்தில் நில அளவை செய்வதற்கும் புல வரைபடம் தருவதற்கும் கிராம நிர்வாக அலுவலருக்கு அதிகாரம் உள்ளது.

**மறுவிசாரணையில் குறுக்கு விசாரணை**

புல வரைபடத்தில் வட்டாட்சியர் கையொப்பமோ தலைமை நில அளவையர் கையொப்பமோ இல்லை என்றால் சரிதான். என்னுடைய கையொப்பம் உள்ளது. கிராம நிர்வாக அலுவலருக்கு அதிகாரம் வழங்கப்பட்டதற்கு அரசாணை ஏதும் உள்ளதா என்றால் உள்ளது. அந்த அரசாணை எண் எனக்கு தெரியுமா என்றால் தெரியாது. அவ்வாறு அரசாணை ஏதும் இல்லை என்றால் சரியல்ல.

Taken down by the typist under my dictation in open Court read over to the witness admitted and acknowledged by him to be Correct.

MOHAMED ARSHAD FAREED M

Digitally signed by MOHAMED ARSHAD FAREED M
DN: cn=MOHAMED ARSHAD FAREED M, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2025.09.11 13:18:26 +0530

District Munsif-Cum-
Judicial Magistrate,
Kodavasal